## எதிர்காலத்திற்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்கி

# சிங்காரச் சென்னையை தொடர்ந்து கட்டியெழுப்புவோம்!

## ரூ.1383 கோடியில் வடசென்னை வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச.6-**

**“எதிர்காலத்திற்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்கி சிங்காரச் சென்னையை தொடர்ந்து கட்டியெழுப்புவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.1383 கோடியில் வடசென்னைக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-**

கடந்த வாரம் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி. ஆனால், என்ன காரணத்திற்காக ஒத்திவைக்கப்பட்டது என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். தமிழ்நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் ஃபெஞ்சல் புயல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, இன்றைக்கு அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் பார்க்கத் தொடங்கியிருக்கிறோம். வானிலை கணிப்புகளைவிட அதிகமான மழை கொட்டி தீர்க்கும் இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கும் மற்ற மாநிலங்களிலும், உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் இந்த மாற்றத்தையும், அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். எல்லா நாட்டிலும் நடப்பதுதான் அப்படி என்ற காரணத்தினால், நம்முடைய தமிழ்நாடு அலட்சியமாக இருந்ததில்லை.

### நிவாரணம் – தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது!

நாங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததால் உயிரிழப்புகள் பெரிதும் ஏற்படவில்லை என்பது முக்கியம். ஆனால், கடலூர் - விழுப்புரம் - கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை - தருமபுரி - கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் அதிகமான அளவிற்கு மழை பெய்து, பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை, நிவாரணத்தை மழை தொடங்கியதிலிருந்து இப்போது வரைக்கும் தமிழ்நாடு அரசு செய்துகொண்டுதான் இருக்கிறது.

ஒன்றிய அரசிடமிருந்தும் நிதியும் நாங்கள் கேட்டிருக்கிறோம். விரைவில் இந்த பாதிப்பிலிருந்து நிச்சயமாக நாம் மீண்டு வருவோம். கடந்த காலங்களில் மழை, வெள்ளத்தில் தவித்த சென்னையை மீட்டெடுத்திருப்பது போன்று, மற்ற பகுதிகளையும் விரைவாக மீட்டெடுப்போம்! ஒட்டுமொத்த தமிழ்நாடும் மீண்டு வரும்! இப்போதே சில மாவட்டங்கள் முழுமையாக மீண்டு வந்து கொண்டிருக்கின்றன!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக மருத்துவ உபகரணங்கள் வழங்கி, 29 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, எரிசக்தி துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அல்லல்படும் மக்களின் வேதனையில் அவதூறு பரப்பி ஆதாயம் தேடலாமா என்று சிலர் மலிவான அரசியலில் ஈடுபடுகிறார்கள். கடந்த ஆட்சியில், அது எந்த ஆட்சி என்பது உங்களுக்குத் தெரியும். 2015 செயற்கை வெள்ளத்திலும், பல்வேறு புயல்களிலும் சென்னையை வெள்ளத்தில் மிதக்கவிட்டது போன்று, இப்போது நாங்கள் தவிக்கவிடவில்லை! அதற்கு ஃபெஞ்சல் புயலில் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளும் நம்முடைய பணிகளும்தான் அதற்கு சாட்சி! முன்பெல்லாம் சென்னையில் மழை பெய்தால், உதவி கேட்டு அல்லாடும் நிலையும், தன்னார்வலர்களிடம் உதவி கேட்டு சோஷியல் மீடியாவில் பதிவிடும் நிலையும், எப்போது வெள்ளம் வடியும்-என்று காத்திருக்க வேண்டிய நிலையும் இருந்தது.

### ஸ்டிக்கர் ஒட்டியக்காலம் மலையேறிவிட்டது!

ஆட்சியாளர்களை களத்தில் பார்க்க முடியாது. அப்படியே வந்தாலும் என்ன பிரச்சினை என்றும் தெரியாமல், “வாக்காளர் பெருமக்கள்”-என்று பேசியவர்கள் இருந்தார்கள். மீடியாக்கள் மைக்கை நீட்டினால், பதில் சொல்லாமல், “ப்ளீஸ் விட்டுடுங்க” -என்று சொன்னவர்கள்தான் இருந்தார்கள், கடந்த கால ஆட்சியில். தன்னார்வலர்கள் உதவி செய்ய வந்தால், அவர்களை மிரட்டுவார்கள். அவர்கள் வழங்கும் நிவாரணப் பொருட்களில் ஸ்டிக்கர் ஒட்டுவார்கள். அந்தக் காலம் எல்லாம் இப்போது மலையேறிவிட்டது!

நாங்கள் எடுத்த நடவடிக்கையால் சென்னை மழை நின்ற அடுத்த நாளே மீண்டு இருக்கிறது. மழை நின்ற உடனே நான் கொளத்தூர் தொகுதியைப் பார்வையிட்டப்போது, அங்கிருந்த ஒரு பெரியவர் சொன்னார். “முதல்முறையாக தில்லை நகர், வீனஸ் நகர், செந்தில் நகர் போன்ற இடங்களில் வெள்ளம் வரவில்லை. இந்த நகருக்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது”-என்று சொன்னார்!

விடியலைத் தருவதுதான் உதயசூரியன். ஆனால், உதயசூரியன் என்றாலே கண்கள் கூசும் ஆட்களுக்கு விடியல் என்றால் தெரியாது. விடியவில்லை... விடியவில்லை... விடியா ஆட்சி என்று சொல்லிக் கொண்டு இருப்பார்கள். தமிழ்நாட்டை படுபாதாளத்திற்கு தள்ளிய அந்த விடியா முகங்களுக்கு என்றைக்கும் விடியவே முடியாது. அது விடியவும் விடியாது. அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

### விமர்சிப்பவர்களுக்கும் பணிகளைச் செய்வோம்!

அதே கொளத்தூர் தொகுதியைச் சேர்ந்த இன்னொருவர் என்னிடம் சொன்னார். “உங்களின் பணிகளெல்லாம் வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெறும்”-என்று பாராட்டினார். அப்போது, நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள், “அண்ணே... இவர் யார் தெரியுமா? இவர் கம்ப்ளைண்ட் பார்ட்டி”-என்று சொன்னார். கம்ப்ளைண்ட் பார்ட்டி -என்று பெயரே உண்டு. எப்போது பார்த்தாலும், நான் போகும்போதெல்லாம் புகார் கொடுத்துக்கொண்டே இருப்பார். உடனே நான் சொன்னேன். ”புகார் கொடுப்பவர்களுக்கும் நாங்கள் பணிகளை செய்வோம். நம்மைப்பற்றி விமர்சனம் செய்பவர்களுக்கும் பணிகளை செய்வோம். ஓட்டு போட்டவர்களுக்கு மட்டுமல்ல. ஓட்டுபோட மறந்தவர்களுக்கும் நாம் நன்மையை செய்வோம். இது தான் உண்மையான பாராட்டு. இந்த பாராட்டுகள்தான் எதிர்கட்சியை வயிறு எரிய வைத்திருக்கிறது. ஏன் என்றால், எவ்வளவு மழை பெய்தாலும் முதலமைச்சர் தொடங்கி, துணை முதலமைச்சர், அமைச்சர்கள் என்று அனைவரும் களத்தில் வந்து நிற்கிறார்கள். நிவாரண உதவிகளை செய்கிறார்கள். நம்மால் அரசியல் செய்யமுடியவில்லை என்று இப்போது தவிக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் நமக்கு மக்களின் மனசுதான் முக்கியம்.

உங்களுக்கு மனசுதான் எங்களுக்கு முக்கியம். பொதுமக்கள் முன்வைக்கும் நியாயமான புகார்களை, விமர்சனங்களை அவர்களின் குறைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதை தீர்க்க செயல்படுகிறோம். நம்முடைய அரசில், மக்களின் குரல் கேட்கப்படுகிறது! உங்களின் தேவைகள் தெரிந்துக்கொள்ள முயற்சிக்கிறோம். அதனால்தான், மழை நின்ற அடுத்த சில நாட்களிலேயே, சென்னையின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கான திட்டங்களைத் தொடங்கி வைக்க நாங்களும் நீங்களும் இங்கு வந்திருக்கிறோம். எவ்வளவு பெரிய மழை பெய்தது. முடிந்த அடுத்தநாளே இன்றைக்கு உங்களை சந்திக்க வந்திருக்கிறோம் என்றால், அதைத்தான் நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர் சேகர் பாபு அவர்களுக்கும், அவருக்கு துணை நின்ற அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ச்சி 6 -ஆம் பக்கம்

# சென்னை மாநகருக்கு கழக ஆட்சியில் அடுக்கடுக்கான திட்டங்கள்!

நம்முடையதாய்நிலத்திற்குதமிழ்நாடு என்று பெயர் சூட்டினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். மெட்ராஸ் என்று இருந்த பெயரை சென்னை என்று தலைவர் கலைஞர் மாற்றினார்.




இந்த சென்னைக்காக தி.மு.க. செய்த திட்டங்களை சிலவற்றை மட்டும் குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், அண்ணா மேம்பாலம், கத்திபாரா பாலம், கோயம்பேடு பாலம், பாடி பாலம், மீனம்பாக்கம் பாலம், மூலக்கடை பாலம், மேற்கு அண்ணாநகர் பாலம், வியாசர்பாடி பாலம், பீட்டர்ஸ்ரோடு

## நாடே வியக்கும் சாதனைகள்! - விழாவில் பட்டியலிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

வெஸ்கார்டுசாலை மேம்பாலம், பீட்டர்ஸ்ரோடு கான்ரான்ஸ்மித் சாலை மேம்பாலம், சர்தார்படேல் சாலை, காந்திமண்டபம் சாலை மேம்பாலம், டி.டி.கே. சாலை –

ஆர்.கே. சாலை மேம்பாலம், டவுட்டன் சந்திப்பு மேம்பாலம், பாந்தியன் சாலை–காசா மேஜர் சாலை மேம்பாலம், டிடிகே சாலை – சி.பி. இராமசாமி சாலை மேம்பாலம், சர்தார் பட்டேல் சாலை – எல்.பி.சாலை மேம்பாலம், எம்.கே.பி. நகர்






மேம்பாலம், பெரம்பூர் முரசொலி மாறன் மேம்பாலம், பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் பாலம்,

தங்கசாலை மணிகூண்டு பாலம், ஆர்.கே நகர் காக்ரேன் பேசின் பாலம், ஜி.கே.மூப்பனார்மேம்பாலம், ரங்கராஜபுரம் மேம்பாலம், உஸ்மான் ரோடு மேம்பாலம், கோடம்பாக்கம் பாலம், ஆலந்தூர் மிசா ஆபிரகாம் பாலம், கோபதி நாராயண சாலை மேம்பாலம், மேத்தா நகர் மேம்பாலம், இந்திரா நகர் பாலம், மேயர் சிட்டிபாபு மேம்பாலம் – இன்னும் நிறைய இருக்கிறது. இரைக்கிறது எனக்கு, அவ்வளவு இருக்கிறது.

அதுமட்டுமல்ல, செம்மொழிப்பூங்கா, தொல்காப்பிய பூங்கா, கலைஞர் நூற்றாண்டு பூங்கா, ஏராளமான சாலையோரப் பூங்காக்கள், கோயம்பேடு காய்கறி அங்காடி, கோயம்பேடு பேருந்து நிலையம்,

மெட்ரோ ரயில், தலைமைச் செயலகமாக கட்டப்பட்டு, இன்றைக்கு பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் மருத்துவமனை கட்டடம், கிண்டியில்





கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை,

ஓ.எம்.ஆர்.-இல் ஐ.டி. காரிடார், டைட்டல் பார்க், நெம்மேலி மற்றும் மீஞ்சூரில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்-என்று



இன்னும் மிகப்பெரிய பட்டியலே போட முடியும்! அதனால்தான் சென்னை எப்போதும் தி.மு.க.வின் கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கிறது!